# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 236 18.2.2026 WEDNESDAY MAASI : 6 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 236 18.2.2026 புதன்கிழமை மாசி : 6 விலை : ரூ.5/-



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER
ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B, மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104


# "தமிழக இடைக்கால பட்ஜெட் 2026!"




## ஆத்தூர் தொகுதி வர்த்தகர்கள், வணிகர்களின் கோரிக்கை நிறைவேற உறுதுணையாக இருப்பேன்

### அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, பிப்.18

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த வணிகர்கள், வர்த்தகர்கள் மற்றும் தொழில் முனைவோருடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி சின்னாளபட்டி விஜய மஹாலில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், துணை செயலாளர்கள் பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, மணி, இன்பராஜ், இராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான அமைச்சர் ஐ.பெரியசாமி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக கல்வி அணி செயலாளருமான தமிழச்சி தங்கப்பாண்டியன், மாநில விவசாய அணி துணைச் செயலாளரும், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான கள்ளிப்;பட்டி மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட வர்த்தககள், வணிகர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் பேசும்போது ஆத்தூர் தொகுதியில் உள்ள சின்னாளபட்டியில் பிரதான தொழிலாக சுங்குடி சேலை உற்பத்தி உள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும், அம்பாத்துரையில் பாண்டியன் எக்ஸ்பிரஸ் மட்டும்தான் நின்று செல்கிறது. தெற்கு மற்றும் வடக்கு பகுதிக்குச் செல்லும் இரயில்கள் நின்று செல்ல வேண்டும், சின்னாபட்டி பேருந்து நிலையத்திலிருந்து அருகில் உள்ள மாவட்டங்களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். தொழில் செய்வோருக்கு இடையூறு ஏற்படும்போது அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

நிகழ்ச்சியில் சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பேரூர் கழ செயலாளர்கள் ஜெயபால், தங்கராஜ், இளங்கோவன், சக்திவேல், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் அறிவழகன், மோகன்ராஜ், முன்னாள் துணைச் செயலாளர் ஜெயகிருஷ்ணன், முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர்.முருகன் உட்பட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏக்வஸ் (Aequs) குழுமம் ரூ.4,000 கோடியில் 7000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் சூளகிரி தொழில் பூங்காவில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான தொகுப்பு அமைப்பதற்கும், விமான இயந்திரங்கள், கியர்பாக்ஸ் உபபாகங்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

## முக்கிய அறிவிப்புகள் என்னென்ன?...

சென்னை: பிப்.18-

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டை நேற்று (பிப்.17) காலை 9.30 மணியளவில் சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

பட்ஜெட் உரையில் அவர், மகளிர் உரிமைத் தொகையோடு, ரூ.2000 கோடை கால சிறப்புத் தொகை வழங்கப்பட்டதால் 'தமிழகமே இன்ப அதிர்ச்சியில் உள்ளது' என்று பெருமிதத்தை வெளிப்படுத்தினார்.

இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்து தங்கம் தென்னரசு ஆற்றிய உரை: பெண்களின் வளர்ச்சியை மையப்படுத்தி தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. விடியல் பேருந்து பயணத்தின் மூலம் பெண்கள் மாதத்துக்கு சராசரியாக ரூ.888 சேமிக்கிறார்கள்.

மகளிர் உரிமைத் தொகை திட்டம் இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ளது. ரூ.5000 வழங்கப்பட்டதால் தமிழகமே இன்ப அதிர்ச்சியில் உள்ளது.

மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு 10,469 புதிய வீடுகள் கட்ட ரூ.630 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், 6,010 வீடுகள் கட்டப்பட்ட நிலையில், மற்ற வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவியர்கள் கல்லூரிகளில் பயிலும் போது மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கி ஊக்கப்படுத்தும் 'புதுமைப் பெண்' திட்டத்தின் கீழ் இதுவரை 6,95,296 மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

பெற்றோரை இழந்த குழந்தைகள் பள்ளிப்படிப்பினைத் தொடர, மாதம் ரூ.2,000 வழங்கும் 'அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ், இதுவரை 10,637 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 23,56,623 நபர்களுக்கு. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில், சென்னை மற்றும் இதர நகர்ப்புறப் பகுதிகளில் இதுவரை 77,800 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.



2025 ஆம் ஆண்டு குடிமைப்பணித் தேர்வில் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 59 நபர்களில் 52 நபர்கள், 'நான் முதல்வன்' திட்டப் பயனாளிகள் ஆவர்.

தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த 5,403 விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.176 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.101 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்க பல்வேறு மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் 199 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 101 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாணவர்களும், தொழில் முனைவோரும் பயன்படுத்தும் வகையில் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30 முதல்வர் படைப்பகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.1.41 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 19 தோழி விடுதிகள் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2030ஆம் ஆண்டுக்குள் 8 லட்சம் வீடுகள் கட்டப்படும். இதுவரை 1.71 லட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன, மேலும் ஒரு லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 6 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணிகள் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 38 கலை, அறிவியல் கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறைக்கு ரூ.718 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

கிராம சாலைகள் திட்டத்துக்கு ரூ.8,911 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித் துறைக்கு ரூ.8,505 கோடியும், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறைக்கு ரூ.17,088 கோடியும், ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.28,687 கோடியும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறைக்கு ரூ.1,400 கோடியும், மருத்துவத் துறைக்கு ரூ.22,090 கோடியும், தொழிலாளர் நலத் துறைக்கு ரூ.1,996 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 2.55 கோடி பேர் பயனடைந்துள்ளனர். 25 இடங்களில் அன்புச் சோலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் மூலம் 17 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

மின்னணு துறை உற்பத்தியில் 41 சதவீத பங்களிப்புடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. செமி கண்டக்டர் திட்டத்துக்கு 5 ஆண்டு செயல் திட்டமாக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.19% வளர்ச்சியை எட்டி நாட்டிலேயே தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் முதலிடம் வகிக்கிறது.

ரூ.285 கோடியில் தமிழகத்தில் சோழர், நொய்யல், வெண்கல அருங்காட்சியங்கள் அமைக்கப்படுகின்றன.

நாட்டிலேயே தொழிற்சாலைகளில் அதிகம் பெண்கள் பணிபுரியும் மாநிலமாக தமிழகம் உள்ளது. பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் சொத்துக்களுக்கான கட்டணம் 1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

ரூ.10 கோடியில் அயலக தமிழர்களுக்கு தமிழ் கற்பிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 8 பிற மாநிலங்கள் மற்றும் அயல் நாடுகளில் தமிழ் படிப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பாரதியின் கனவை நிறைவேற்றும் அரசாக திமுக உள்ளது.

19.34 லட்சம் மாணவர்கள் தமிழக அரசின் காலை உணவு திட்டத்தால் பயன் பெறுகின்றனர்.

தூய்மைப் பணியாளர்களுக்கு மேலும் 30 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் ,

தமிழகத்தில் உள்ள 1048 கோயில்களுக்கு சொந்தமான ரூ.8,363 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் ரூ.8,100 கோடி செலவில் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

சுற்றுலா துறையில் நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது. சுற்றுலாத் துறைக்கு ரூ.1394 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நதிக்கரை மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.374 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் வீடுகள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள ரூ.755 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல், குடிநீர் வழங்கல், கடற்கரைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் ரூ.6,045 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 36 லட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகும் வகையில், ரூ.1,237 லட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கான 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

கப்பல் கட்டுமானம் மற்றும் கப்பல் இயந்திர உற்பத்தித் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட 'தமிழ்நாடு கப்பல் கட்டும் கொள்கை விரைவில் வெளியிடப்படும். அப்போது. கப்பல் கட்டும் தொழிலில் உலகளாவிய ஒரு மையமாக தமிழ்நாடு உருவெடுக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டப் பணிகள், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TAN-FINET) மூலம், தற்போது 11,953 கிராம ஊராட்சிகளில் 95% முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் மூலம், நெய்தல் மீட்சி இயக்கம் மற்றும் தொடர்புடைய திட்டங்களின் கீழ் 3,733 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்திக் காடுகள் மீள்உருவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் மூன்று வழித்தடங்களில், 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.9 கி.மீ. தூரத்திற்கான சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

14.6 கி.மீ. நீளமுள்ள 11 மெட்ரோ நிலையங்களைக் கொண்ட பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் போரூர் வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

திறமையான மாணவர்கள் உலகப்புகழ் பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க தொடங்கப்பட்ட, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 385 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

அண்ணல் அம்பேத்கர் தொழில்கள் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், 4,948 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்கு 420 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக ரூ. 16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் புனரமைப்பிற்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு அரசின் பல்வேறு திட்டங்களையும் பட்டியலிட்டுப் பேசினார்.



## தி.மு.க சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் குரல்குட்டை ஆர்.ராமசாமி நியமனம்

■ தி.மு.க. சுற்றுச்சூழல் அணி தெற்கு மாவட்ட அமைப்பாளராக தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு குரல் குட்டை ஆர். ராமசாமி அவர்கள் மத்திய ஒன்றிய கழக செயலாளர் செந்தில் குமார் மற்றும் எம்.பி. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சரும், கழக துணை பொதுச் செயலாளருமான மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி பொறுப்பு வழங்கிய எம்.பி. மற்றும் ஒன்றிய கழக செயலாளருக்கும் சால்வை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் ரமேஷ் கிளை கழக செயலாளர், மடத்தூர் கிளை கழக செயலாளர் தேவராஜ், சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் பிப்.23 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை, பிப்.18-

தமிழகத்தில் நாளை முதல் பிப்.23ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலவுகிறது. இது மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நாளை வலுப்பெறக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை வறண்ட வானிலை நிலவக்கூடும். நாளை கடலோர தமிழகம், தென் தமிழகத்தின் உள் மாவட்டங்களில், ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழக பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

21ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 22ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 23ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட தமிழக மாவட்டங்களில் நாளையும், நாளை மறுதினமும் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகளில் 19 முதல் 21ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வர்களின் தற்கொலையை இயல்பாக்கி விட்டோம்; இது வருத்தத்துக்குரியது” : நடிகை டாப்ஸி வேதனை



பாட்னா, பிப்.18-

பாட்னாவில் நீட் தேர்வுக்கு தயாரான மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இந்த வழக்கு குறித்த விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நீட் தேர்வர்களின் தற்கொலை மரணத்தை நாம் இயல்பாக்கி விட்டோம்; பாட்னா சம்பவம் மிகவும் வருத்தத்துக்குரியது என்று நடிகை டாப்ஸி கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் நடிப்பில் உருவாகி உள்ள ‘அஸ்ஸி’ திரைப்படம் வரும் 20ம் தேதி வெள்ளித்திரையில் வெளியாக உள்ளது. அனுபவ் சின்ஹா இயக்கி உள்ளார். இதில், கனிஸ்குருதி, ரேவதி, மனோஜ் பஹ்வா, குமுத் மிஸ்ரா ஆகியோர் நடித்துள்ளனர். இதில் ஊழல் நிறைந்த அமைப்பு மற்றும் ஆணாதிக்கத்துக்கு எதிராகப் போராடும் வழக்கறிஞராக டாப்ஸி நடித்துள்ளார். பாலியல் வன்கொடுமை வழக்கை விசாரிக்கும் நீதிமன்ற விவகாரத்தை மையக்கருவாக கொண்ட படம் இது என தகவல்.

இந்த சூழலில் பிஹார் தலைநகர் பாட்னாவில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு டாப்ஸி பேட்டி அளித்தார். அப்போது நீட் தேர்வுக்கு தயாரான மாணவி ஒருவரின் மரணம் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. “இங்கு மட்டுமல்ல இது மாதிரியான சம்பவங்கள் நாடு முழுவதும் அரங்கேறி வருகிறது. இது எனக்கு மிகுந்த வருத்தம் தருகிறது. இந்த மரணங்களின் எண்ணிக்கை கூடுதலாக கூட இருக்கலாம்.

இப்போது நாம் இதுபோன்ற தற்கொலை மரணங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை நிறுத்திவிட்டோம். அதை நாம் இயல்பாக்கி விட்டோம்; இது மிகவும் வருத்தத்துக்குரியது.” என்று அவர் தெரிவித்தார். பாட்னாவில் நீட் தேர்வுக்கு தயாராகும் மாணவி ஒருவரின் மரணம் சர்ச்சையாகி உள்ள நிலையில் டாப்ஸி இதை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்தும் அவர் இதில் பேசி இருந்தார்.

# பதவி விலகும் முன் முகமது யூனுஸ் ஆற்றிய உரை இந்தியாவுக்கு எதிரான பேச்சால் சர்ச்சை



டாக்கா, பிப்.18-

நேபாளம், பூட்டான் நாடுகளுடன் இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களைச் சேர்த்து தனது பிரியாவிடை உரையில் முகமது யூனுஸ் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

வங்கதேச பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக நடைபெற்ற மாணவர் போராட்டத்தால் அவர் அந்நாட்டை விட்டு வெளியேறியதை அடுத்து, அதன் தலைமை ஆலோசகராகப் பொறுப்பேற்றவர் முகமது யூனுஸ். வங்கதேச நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் வங்கதேச தேசியவாத கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதை அடுத்து, முகமது யூனுஸ் தனது பதவியில் இருந்து விடைபெற்றுள்ளார்.

விடைபெறும் முன்பாக அவர் ஆற்றிய உரையில், ‘‘வங்கதேச அரசின் தலைமை ஆலோசகராக பதவி வகித்த இந்த 18 மாத காலத்தில், வங்கதேச வெளியுறவுக் கொள்கையில் இறையாண்மை, தேசிய நலன், கண்ணியம் ஆகியவற்றை மீட்டுள்ளேன். நாடு, வேறு எந்த ஒரு நாட்டுக்கும் அடிபணியவில்லை. அவர்களின் உத்தரவுப்படி நாம் நமது அரசை நடத்தவில்லை’’ என தெரிவித்தார்.

மேலும் அவர், ‘‘நமது கடல் பகுதி ஒரு புவியியல் எல்லை மட்டுமல்ல, உலக நாடுகளுடன் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒரு நுழைவு வாயில். நேபாளம், பூட்டான், ஏழு சகோதரிகளுடன் இந்த பிராந்தியம் மிகப் பெரிய பொருளாதார ஆற்றலைக் கொண்டுள்ளது’’ என்று தெரிவித்தார்.

இதில், இந்தியாவின் பெயரைக் குறிப்பிடாமல், இந்தியாவுக்கு உட்பட்ட அசாம், மேகாலயா, திரிபுரா உள்ளிட்ட வட கிழக்கில் உள்ள 7 மாநிலங்களை நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்கு இணையாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான அவரது இந்த பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

தனது பதவிக்காலத்தில், இந்தியாவுக்கு எதிராகவும் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் வங்கதேச வெளியுறவுக் கொள்கைகளை வழிநடத்தியவர் முகமது யூனுஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக இடைக்கால பட்ஜெட்... மேனா மினுக்கி உரை!” : பழனிசாமி விமர்சனம்



சென்னை, பிப்.18-

“கடந்த 5 ஆண்டுகளைப் போல இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கையும் வார்த்தை ஜாலங்கள் நிறைந்த மேனா மினுக்கி உரையாகத்தான் இருக்கிறது” என எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “ஏமாற்று வேலை திராவிட மாடல் அரசு தனது கடைசி பட்ஜெட்டை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு எப்படி காது குத்தியுள்ளது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறோம். 2021ல் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் 4ல் ஒரு பங்கைகூட நிறைவேற்றவில்லை. திமுகவினர் 95 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக பொய் சொல்கிறார்கள்.

அரசு ஊழியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரையும் இந்த அரசு ஏமாற்றியுள்ளது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. கடந்த 5 ஆண்டுகளைப் போல இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையும் வார்த்தை ஜாலங்கள் நிறைந்த மேனா மினுக்கி உரையாகத்தான் இருக்கிறது.

நிதி நிலைமையை சரிசெய்ய ரகுராம் ராஜன் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. ஆனால், அதன் பின்புதான் கடன் அதிகரித்துள்ளது. மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்துக் கொண்டே சென்றால், மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கும். தமிழகத்தின் நிதிப்பற்றாக்குறை ரூ.16,000 கோடி அதிகரித்துள்ளது.

வேளாண் பட்ஜெட் எனக் கூறி மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள். அத்திப்பழம் வெளியே அழகாக இருக்கும். உற்றுப் பார்த்தால் உள்ளே சொத்தையாக இருக்கும். இதற்கு உதாரணம் இந்த நிதிநிலை அறிக்கை.

வரவு செலவு திட்டம் பற்றி உருப்படியாக எதுவும் இல்லை. ஒரு வருடத்திற்கு 100 நாட்கள் சட்டமன்ற நிகழ்வு நடைபெறும் என தெரிவித்தார்கள். ஆனால் ஐந்து வருடங்களில் மொத்தமாகவே 140 நாட்கள் தான் சட்டப்பேரவை கூட்டப்பட்டிருக்கும் என கருதுகிறேன். அதிமுக தலைமையிலான கூட்டணி ஆட்சியமைக்கும்” என்று பழனிசாமி தெரிவித்தார்.

# இடைக்கால பட்ஜெட்: ‘காதுகுத்து விழா’ அழைப்பிதழுடன் பேரவைக்கு வந்த அதிமுக உறுப்பினர்கள்






சென்னை, பிப்.18-

தமிழக சட்டப்பேரவையில் இடைக்கால பட்ஜெட்டை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். இந்நிலையில், இந்த இடைக்கால பட்ஜெட் கூட்டத் தொடருக்கு ‘காதுகுத்து விழா’ அழைப்பிதழுடன் பேரவைக்கு வருகை தந்து கவனம் ஈர்த்தனர் அதிமுக உறுப்பினர்கள்.

“கடந்த நாலரை ஆண்டுகளாக பட்ஜெட் என்னும் பெயரில் தமிழ்நாடு மக்களுக்கு நடத்தப்படும் மாபெரும் காது குத்தும் விழா இந்த வருடமும் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. நாள்: பிப்ரவரி 17, 2026, இடம்: தமிழக சட்டமன்றம், நேரம்: காலை 10 மணி முதல். இவ்விழாவிற்கு தலைமை தாங்குபவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். நிதியமைச்சர் தங்கம் தென்னரசு முன்னின்று காது குத்துவார்.

மேற்படி விழாவில் கூவம் சுத்திகரிப்பிற்கு நிதி, சென்னை மழைநீர் வடிகால் திட்டத்திற்கு நிதி, சிங்காரச் சென்னை திட்டத்திற்கு நிதி என்று விதவிதமாக காது குத்தப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறோம்.

பி.கு: சொத்து வரி, வீட்டு வரி, குடிநீர் வரி, மின் கட்டணம் என பல்வேறு முறைகளில் 'மொய்' வைக்கலாம்” என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழுடன் சட்டப்பேரவைக்கு வருகை தந்த அதிமுக எம்எல்ஏக்கள், அதை அனைவரும் பார்க்கும்படி கைகளில் ஏந்தி வந்தனர்.

# ராஜஸ்தானில் பட்டாசு ஆலை வெடி விபத்தில் 8 பேர் உயிரிழப்பு

ஜெய்ப்பூர், பிப்.18-

ராஜஸ்தானில் சட்டவிரோத பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 8 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ராஜஸ்தானின் அல்வார் மாவட்டம், பிவாடி தொழிற்பேட்டையில் மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையில் சட்டவிரோதமாக பட்டாசு ஆலை இயங்கி வந்துள்ளது. இங்குள்ள ஒரு கட்டிடத்தில் நேற்று காலையில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது. இதையடுத்து அருகில் இருந்த மற்ற கட்டிடங்களுக்கும் தீ வேகமாகப் பரவியது. இதில் மேலும் 3 முறை வெடி விபத்து ஏற்பட்டது.

விபத்தின் போது அந்த ஆலையில் சுமார் 25 தொழிலாளர்கள் இருந்ததாகவும் இவர்கள் பிஹார் மற்றும் உ.பி.யை சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த விபத்தில் 8 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயம் அடைந்தனர். வெடிவிபத்தை தொடர்ந்து அருகில் உள்ள ஆலைகளில் இருந்த தொழிலாளர்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டனர். அப்பகுதியில் தற்காலிகமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தீயை அணைக்கும் பணியில் 6 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. தீயணைப்பு வீரர்கள் நீண்டநேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர். தொழிற்சாலை கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்தவர், அதன் உரிமையாளருக்கு தெரியாமல் அங்கு பட்டாசு தயாரித்து வந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# லாலு, ராப்ரி தேவி மீது குற்றச்சாட்டு பதிவு



புதுடெல்லி, பிப்.18-

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் ரயில்வே அமைச்சராக பதவி வகித்தார்.

அப்போது ரயில்வே வேலை வழங்க லாலு குடும்பத்தினர் லஞ்சமாக நிலம் பெற்றுக்கொண்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக சிபிஐ வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. இதுவரை 2 குற்றப் பத்திரிகைகள், 2 துணை குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த வழக்கில் லாலு, அவரது மனைவி ராப்ரி தேவி ஆகியோர் மீது டெல்லி ரோஸ் அவென்யூ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

# எனக்கு எந்த தொகுதி என்று எடப்பாடியிடம் கேளுங்கள்: செல்லூர் ராஜூ கலகல

வாடிப்பட்டி, பிப்.18-

மதுரையில் அதிமுக மாஜி அமைச்சர் செல்லூர் ராஜூ, நிருபர்களிடம் கூறியதாவது:

மக்களுக்கான ஒரு ஆளாக இருப்பதால் எனக்கு ஓட்டு போடுகிறார்கள். இல்லாவிட்டால், மக்கள் போயிட்டு வாங்கனு சொல்லிருவாங்க. நான் தொகுதி மாறுகிறேனா, மாறவில்லையா என்பதை எங்களது பொதுச்செயலாளர் எடப்பாடியிடம் தான் கேட்க வேண்டும். என்னைத் தோற்கடிக்க வேண்டும் என நினைப்பது வாஸ்தவம் தான். அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன்.

நயினார் நாகேந்திரன், திரிஷா குறித்து பேசியது தொடர்பாக அவரே முற்றுப்புள்ளி வைத்து விட்டார். அதிமுகதிமுகவுக்கும் தான் போட்டி, மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. புதிய கட்சிகள் மட்டுமின்றி எந்த கட்சி வந்தாலும் ஏற்றுக்கொள்வோம் என எடப்பாடி சொல்லியிருக்கிறார். இனி என்னிடம் கேள்வி கேட்கும்போது, திமுகஅதிமுக பற்றி கேளுங்கள். மற்றபடி எதையாவது கேட்டு, அதை ட்ரெண்டாக்கி விடுகிறீர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே’ காங். எம்.பி மாணிக்கம் தாகூரின் சூசக பதிவு






சென்னை, பிப்.18-

எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக மற்றும் காங்கிரஸ் இடையிலான கூட்டணி குறித்து இரண்டு கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். இது தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. இதில் காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர், கூட்டணி குறித்த தனது கருத்துகளை தொடர்ச்சியாக தெரிவித்த வண்ணம் உள்ளார்.

இந்நிலையில், கூட்டணி குறித்து யாரும் பொதுவெளியில் பேசக் கூடாது என்றும் காங்கிரஸில் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கேவை விட யாரேனும் பெரியவர்களா? என்று சொல்லி மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோரை காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை கண்டித்தார்.

இந்தச் சூழலில் தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் பாரதியாரின் ‘அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே’ என்பதை சுட்டும் படம் ஒன்றை மக்களவையில் காங்கிரஸ் கட்சியின் கொறடாவாக உள்ள மாணிக்கம் தாகூர் பகிர்ந்துள்ளார். அது உட்கட்சி அளவில் தன்மீதான விமர்சனத்துக்கு அவர் கொடுத்துள்ள ரிப்ளை என பார்க்கப்படுகிறது.

“2021ல் திமுக 173 தொகுதியில் போட்டியிட்டு 133 இடங்களில்தான் வெற்றி பெற்றது. நாங்கள் (காங்கிரஸ் கட்சி) கேட்பது நீங்கள் தோற்ற அந்த இடங்களைத்தான். அதிகாரப் பகிர்வு என்பது அவசியம்; ஆட்சியில் பங்கு கேட்பது எங்கள் உரிமை. அதை மக்கள் தீர்மானிப்பார்கள்” என அண்மையில் மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

‘ஆட்சியில் பங்கு’, ‘அதிகாரத்தில் பங்கு’, ‘தேர்தலில் அதிக இடங்களை தங்களுக்கு ஒதுக்க வேண்டும்’ என காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் தொடர்ந்து பொதுவெளியில் பேசி வருகின்றனர். இந்த கருத்தை மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அதற்கு திமுக நிர்வாகிகளும் பதில் அளித்து வருகின்றனர். இது திமுக மற்றும் காங்கிரஸ் கட்சி இடையிலான கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

கூட்டணிப் பேச்சுவார்தையின் நிலை என்ன? “கூட்டணிப் பேச்சுவார்த்தைக்காக காங்கிரஸ் தரப்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதமே குழுவை அறிவித்துவிட்டோம். தொடர்ந்து முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தையைத் தொடங்குமாறு கேட்டுக்கொண்டோம். ஆனால், 70+ நாட்கள் கடந்தும் திமுக தரப்பில் இன்னும் குழு அமைக்கப்படவில்லை. இருப்பினும், ஒருமித்த கருத்துடன் சுமுகமான முடிவு எட்டப்படும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறோம்” என்று தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்த சூழலில் பிப்.22ம் தேதி முதல் கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை தொடங்கும் என திராவிட முன்னேற்ற கழகம் அறிவித்தது கவனிக்கத்தக்கது.

# விழுப்புரம் அருகே கோயில் திருவிழா தொடர்பான முன்விரோத கொலை வழக்கில் 21 பேரின் விடுதலை ரத்து செய்தது சென்னை ஐகோர்ட்




சென்னை, பிப்.18-

விழுப்புரம் அருகே கோயில் திருவிழா தொடர்பான முன்விரோத கொலை வழக்கில் 21 பேரின் விடுதலையை சென்னை ஐகோர்ட் ரத்து செய்தது. 21 பேரின் விடுதலையையும் ரத்து செய்து, ஆயுள் தண்டனை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. விழுப்புரம் கிளியனூரில் 2013ம் ஆண்டு முன்விரோதம் காரணமாக பாஸ்கர் கொலை வழக்கில் 21 பேரை விடுதலை செய்து திண்டிவனம் கூடுதல் அமர்வு நீதிமன்றம் 2017ல் தீர்பளித்தது. 21 பேர் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து பாஸ்கரின் மனைவி அமுதா, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

# பொள்ளாச்சி என்.ஜி.எம் கல்லூரி ஆசிரியைக்கு முனைவர் பட்டம்: ஆளுநர் ஆர்.என்.ரவி வழங்கினார்



கோவை, பிப்.18-

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கடந்த 14.02.2026 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் தமிழக ஆளுநரும், ஆர்.என்.ரவி அவர்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இதில், பொள்ளாச்சி என்.ஜி.எம்.கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வேதியியல் துறையைச் சேர்ந்த கி. தமிழ்த்தென்றல் அவர்களுக்கு முனைவர் (Ph.D) பட்டம் வழங்கப்பட்டது.

இவர், "உயிரி மருத்துவம் மற்றும் சுற்றுச் சூழல் பயன்பாடுகளில் சுகாதாரம் மற்றும் நிவர்த்தி செய்வதற்கான பல்துறை கருவிகள்" (Multifunctional Tools for Healthcare and Remediation in Biomedical and Environmental Applications) எனும் தலைப்பில் தனது முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டார். தற்போதைய சூழலில் மிகவும் அவசியமான சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மருத்துவத் துறை சார்ந்த இவரது ஆய்வின் முடிவுகள் பெரிதும் பாராட்டப்பட்டன.

முனைவர் பட்டம் பெற்ற கி. தமிழ்த்தென்றலை, என்.ஜி.எம் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் சக பேராசிரியர்கள் நேரில் சந்தித்து தங்கள் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களின் திறப்பு விழா




செங்கோட்டை ,பிப்.18-

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். செங்கோட்டை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தனித்தனியாக பிரிக்கப்பட்டு, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களாக செயல்படுகிறது. மேற்படி இரண்டு நீதிமன்றங்களின் திறப்பு விழா நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து காணொளி காட்சி மூலமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா, தென்காசி மாவட்ட பொறுப்பு நீதியரசர் S.சௌந்தர் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில், B. ராஜவேல், முதன்மை மாவட்ட நீதிபதி, தென்காசி. J.கிறிஸ்டல் பபிதா, தலைமை குற்றவியல் நடுவர், தென்காசி, ஏ.கே.கமல் கிஷோர், மாவட்ட ஆட்சி தலைவர், தென்காசி, G.S.மாதவன், காவல் கண்காணிப்பாளர், தென்காசி மற்றும் தென்காசி மாவட்டத்தின் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் V.ஆதிபாலசுப்பிரமணியன், R.சாமி, செயலாளர், வழக்கறிஞர் சங்கம், செ ங்கோட்டை, ஸி.மாடக்கண், தலைவர், அட்வகேட் அசோசியேசன், தென்காசி மற்றும் வழக்கறிஞர்கள். நீதிமன்ற பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சின்னாளபட்டி காமாட்சி நகர் முளைப்பாரி ஊர்வலத்துடன் சந்து மாரியம்மன் திருவிழா

சின்னாளபட்டி, பிப்.18-

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை காப்புக்கட்டுதலுடன் தொடங்கிய இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, அம்மனை அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. பக்தர்கள் பிருந்தாவனத் தோப்பிற்கு முளைப்பாரி ஊர்வலத்துடன் சென்று, அங்கு அம்மன் அருள்வேண்டி கும்மியடித்தனர். தொடர்ந்து, மாரியம்மனுக்கு மல்லிகைப்பூ அலங்காரம் செய்யப்பட்டபோது, கோவில் பூசாரி மற்றும் பெண்களுக்கு அருள் வந்து ஆடியது பக்தர்களிடையே பெரும் பரவசத்தை ஏற்படுத்தியது. பின்னர், லெட்சுமி நாராயணப் பெருமாள் மற்றும் 18 ம்படி கருப்பணசாமிக்குத் தீபாராதனை காட்டப்பட்டு, அம்மன் ஊர்வலமாகப் புறப்பட்டார்.

மதியம் கோவில் கமிட்டி சார்பில் பிரம்மாண்ட அன்னதானம் நடைபெற்றது.

மாலையில் சிறுவர், சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கோவில் கமிட்டித் தலைவர் செல்வராஜ், பூசாரி கரியகவுண்டர், பெட்டி பூசாரி சரவணன் மற்றும் விழாக்கமிட்டியினர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# ‘குடியிருப்பு பகுதியில் மதுக்கடை வேண்டாம்’ஈரோடு ஆட்சியரிடம் பொதுமக்கள் திரண்டு மனு




ஈரோடு, பிப்.18-

ஈரோடு சென்னிமலை சாலை, காந்தி நகர் மற்றும் ஜி.பி.டி.எல் நகர் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஆட்சியரைச் சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:

*புதிய பார் வசதி:* சென்னிமலை சாலையில் உள்ள காந்தி நகர் பகுதியில் தற்போது புதிய திலி2 மதுபான பார் அமைப்பதற்கான கட்டிட வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

*பாதிப்பு:* இந்தப் பகுதியில் காந்தி நகர் மற்றும் ஜி.பி.டி.எல் நகரில் சுமார் 2,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஏற்கனவே இப்பகுதியில் ஒரு டாஸ்மாக் கடை செயல்பட்டு வருவதால், பொதுமக்களின் நடமாட்டம் மற்றும் பாதுகாப்பிற்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் மீண்டும் ஒரு புதிய பார் திறக்கப்பட்டால், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நிம்மதியற்ற சூழல் உருவாகும்.

*ஆய்வு செய்யக் கோரிக்கை* எனவே, மாவட்ட ஆட்சியர் நேரடியாக இந்த இடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு இடையூறாக அமைய உள்ள இந்த மதுபான பாருக்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கக்கூடாது என்றும் அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.

*போராட்ட எச்சரிக்கை:* "எங்கள் கோரிக்கையை மீறி இந்தப் பகுதியில் புதிய மதுபான பார் திறக்கப்பட்டால், அப்பகுதி மக்களைத் திரட்டி மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்துவோம்" என்றும் பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

# கடைசி பட்ஜெட்டில்கூட பொய்களை மட்டுமே சொல்லி இருக்கிறார் நிதியமைச்சர்" : அண்ணாமலை



சென்னை, பிப்.18-

"கடந்த ஐந்து ஆண்டுகளில், எந்தத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையுமே கண்டுகொள்ளாமல், கடைசி பட்ஜெட்டில் கூட பொய்களை மட்டுமே சொல்லுவேன் என்று அடம்பிடித்திருக்கிறார் தமிழக நிதியமைச்சர்" என பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழக மக்களை ஏமாற்றி வந்த திமுக அரசு, தனது கடைசி பட்ஜெட் உரையிலும் பொதுமக்களை ஏமாற்றுவதை விடவில்லை. தூய்மைப் பணியாளர்கள், பணி நிரந்தரம் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் கோரும் ஆசிரியப் பெருமக்கள், அரசு மருத்துவர்கள், லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுப் பணிகளை விற்பனை செய்து வரும் திமுக அமைச்சர்களை எதிர்த்துப் போராடும் இளைஞர்கள் என, கடந்த ஐந்து ஆண்டுகளில், எந்தத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையுமே கண்டுகொள்ளாமல், கடைசி பட்ஜெட்டில் கூட பொய்களை மட்டுமே சொல்லுவேன் என்று அடம்பிடித்திருக்கிறார் தமிழக நிதியமைச்சர்.

கட்டிடங்கள் இல்லாமல் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் நம் குழந்தைகள், அடிப்படை வசதிகள் கூட இல்லாத மாணவர் விடுதிகள், பள்ளி மாணவர்களிடையே பெருகி வரும் போதைப் பொருள் கலாச்சாரம் என எது குறித்தும் அக்கறை இல்லாமல், வழக்கம்போல பொய்களை வாசித்துச் சென்றிருக்கிறார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், திமுக வாங்கிக் குவித்த தமிழகத்தின் மொத்த கடன் தொகை, வரும் மார்ச் 31, 2027ல் 10,62,248 கோடியாக இருக்கும் என கூறியிருக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. புதிய திட்டங்கள் எதையும் செயல்படுத்தவில்லை. பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யவில்லை. எதற்காக திமுக இத்தனை லட்சம் கோடி கடன் வாங்கியது? எங்கே சென்றது இந்த நிதி மொத்தமும்?

திமுகவுக்கு வாக்களிக்காத கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில், மெட்ரோ திட்டம் வரக்கூடாது என்று, வேண்டுமென்றே தவறான திட்ட அறிக்கையை வழங்கிவிட்டு, தற்போது மத்திய அரசு மீது குற்றம் சுமத்தும் தமிழக நிதியமைச்சர், திருத்தப்பட்ட திட்ட அறிக்கையை ஏன் இன்னும் சமர்ப்பிக்கவில்லை? உண்மையாகவே மெட்ரோ திட்டம் வர வேண்டுமென்று அக்கறை திமுகவுக்கு இல்லை. அதனால்தான், நான்கு மாதங்கள் ஆகியும், திருத்தப்பட்ட திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

நிதியமைச்சர் தங்கம் தென்னரசு , அவசர அவசரமாக பட்ஜெட் அறிக்கையை வாசித்ததைப் பார்த்தால், 'அப்பாடா, இதை விரைவில் முடித்து விட்டால், இனி எப்போதும் நமக்கு இந்த பட்ஜெட் அறிக்கை வாசிக்கும் தொல்லை இருக்காது. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து பொழுது போக்கலாம்' என்ற நிம்மதிப் பெருமூச்சுதான் வெளிப்படுகிறது.

முதலமைச்சரின் தந்தை மறைந்த கருணாநிதி காலத்தில் இருந்து, திமுக பட்ஜெட் என்றாலே தவறாமல் இடம்பெறும், கூவத்தைச் சுத்தம் செய்வோம், அடையாறை சுத்தம் செய்வோம் என்று கூறி ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யும் நகைச்சுவை, இந்த ஆண்டு இடம்பெறவில்லை என்பது, உண்மையாகவே வருத்தமளிக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, அடையாறைச் சுத்தம் செய்ய ஆண்டுக்கு ரூ. 1,500 கோடி ஒதுக்கீடு செய்ததாகக் கூறிய நிதி எங்கு போனது என்பதும் தெரியவில்லை" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "கூட்டணி ஆட்சி என்ற நிலைக்கு கட்சிகள் வர வேண்டும்" : தவாக தலைவர் வேல்முருகன்

கோவை, பிப்.18-

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற நிலைக்கு திமுக, அதிமுக வர வேண்டும் என, தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் தெரிவித்தார்.

கோவை புலியகுளம் பகுதியில், இளைஞர்கள் த.வா.கவில் இணையும் நிகழ்ச்சி நேற்று நடைபெ ற்றது. இதில் கலந்து கொண்ட பின்னர், அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பல கட்சிகள் கூட்டணி பேசிவருகின்றன. ஆனால், நாங்கள் கட்சியை பலப்படுத்தி வருகிறோம்.

தமிழீழ மண்ணில் நடந்த இனப் படுகொலைக்காக நீதி கேட்டு போராடி வருகிறோம். தேர்தல் அரசியல் என்பது மக்களுக்காக போராடுவது. அதனை எங்கள் கட்சி செய்யும்.

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு எதுவும் இல்லை. மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை. தமிழ் சமூகத்திற்கு பிரதமர் மோடி அரசு எதுவும் செய்யவில்லை.

அதிமுக 200 தொகுதிக்கு மேல் வெல்லும் என அக்கட்சியின் பொதுச் செய லாளர் பழனிசாமி கூறுகிறார். ஆனால், பழனிசாமி தான் முதல்வர் என மத்திய அமைச்சர் அமித்ஷா இதுவரை அறிவிக்க வில்லை.

தமிழ்நாட்டில் பாஜக வர வாய்ப்பு இல்லை. கூட்டணி ஆட்சி என திமுக, அதிமுக இரண்டும் கூறவில்லை. ஆனால், அவர்கள் அந்த நிலைக்கு வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# விஜய் முதலில் பரீட்சை எழுதட்டும் பாஸ் பண்றாரான்னு பார்ப்போம் : ஆர்.பி.உதயகுமார் கிண்டல்

மானாமதுரை, பிப்.18-

தேர்தல் களத்திலேயே விஜய் இல்லை, அவருக்கு அனுபவம் போதாது என அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் அவர் கூறியதாவது:

விஜய் முதலில் பரீட்சை எழுதட்டும். மக்கள் என்ன மதிப்பெண் கொடுக்கிறார்கள், அவர் பாஸ் பண்ணுகிறாரா என பார்த்துவிட்டுதான் அவரை விமர்சனம் செய்ய முடியும். விஜய்க்கு அனுபவம் போதாது. 41 தொண்டர்கள் இறந்துள்ளனர். ஒவ்வொரு கூட்டத்திலும் உயிர்கள் பலியாகிறது. ஆனால் யார் இறந்தாலும் பரவாயில்லை. தான்தான் முதலமைச்சர் என்று விஜய் பேசுவதை மக்கள் ஏற்க மாட்டார்கள். விஜய் களத்தில் இல்லாமலேயே இருப்பதுபோல் காட்டிக்கொள்கிறார். காலமும், மக்களும் அதற்கு தீர்ப்பு வழங்குவார்கள். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பது இல்லை. இவ்வாறு கூறினார்.

# தமிழகத்தின் பெருமையை உலக அளவில் கொண்டு சென்றவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!": ஐ.பெரியசாமி புகழாரம்



சின்னாளபட்டி, பிப்.18-

தமிழ்நாட்டின் பெருமையை உலக அளவில் எடுத்துச் சென்றவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக சார்பாக சின்னாளபட்டியில் நடைபெற்ற "தமிழ்நாடு தலை குனியாது" மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

*கூட்டத்தின் சிறப்பம்சங்கள்:*

இந்தியா மட்டுமல்லாது உலக நாடுகளும் போற்றும் வகையில் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் ஆட்சி அமைந்துள்ளது. இளைஞர் எழுச்சி: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் திட்டங்களால் குக்கிராமத்து மாணவர்களும் இன்று உலக சாதனையாளர்களாக மாறி வருகின்றனர்.

"திமுகவிற்குச் சோதனை வந்தபோது தென்தமிழகத்தில் கட்சியை நிலைநிறுத்தியவர் ஐ.பி. அய்யா அவர்கள்" என தென்சென்னை எம்.பி தமிழச்சி தங்கப்பாண்டியன் நெகிழ்ச்சியுடன் பேசினார்.

*2026 இலக்கு* : வரும் சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் 'தளபதியார்' முதல்வராவார் என உறுதி ஏற்கப்பட்டது.

கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, இன்பராஜ், ரெட்டியார்சத்திரம் மணி, பிள்ளையார்நத்தம் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஜெயபால், இளங்கோவன், தங்கராஜ், சக்திவேல், சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரூபன்டென்சிங் ராஜா, சுப்பிரமணி, வி.ஆர்;.ரமேஷ், சுப்புலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக கல்வி அணி செயலாளருமான தமிழச்சி தங்கப்பாண்டியன், மாநில விவசாய அணி துணைச் செயலாளரும், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான கள்ளிப்;பட்டி மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டம் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோட்டமங்கலம் கிராமம் வரதராஜபுரத்தில் தார் சாலை அமைக்க பூமி பூஜையை திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் முருகேஷ், மாவட்ட பாசறை செயலாளர் விருகல்பட்டி பிரகாஷ், ஒன்றிய பாசறை செயலாளர் அருண் மற்றும் கோட்டமங்கலம் ஊராட்சி கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், 6 நகராட்சிகள் (ம) 17 பேரூராட்சிகளிலுள்ள 440 ளுக்கும்" வார்டுகளுக்கும், அனைத்து நகர்ப்புற வார்டுகளுக்கும் 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினைகொண்டு செல்லும் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் உள்ளார்.



## புளியங்குடி மீனாட்சி சமேத சொக்கநாதர் கோவில்: சனி மகா பிரதோஷ விழா கோலாகலம்

புளியங்குடி, பிப்.18-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் புளியங்குடி சிந்தாமணியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மீனாட்சி சமேத சொக்கநாதர் திருக்கோவில் சனி மகா பிரதோஷ விழாவானது வெகு விமர்சியாக நடைபெற்றது. பிரதோஷ விழாவையொட்டி நந்திகேஸ்வரருக்கு பன்னீர், சந்தனம், பால், இளநீர், விபூதி, பஞ்சாமிர்தம், போன்ற பல்வேறு நறுமணப் பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து நந்திகேஸ்வரருக்கு பஞ்ச வாத்தியங்கள் முழங்க பக்தர்களின் ஹர ஹர மகாதேவா கோசங்களுடன் மகா தீபாராதையானது நடைபெற்றது. கோவில் வளாகத்திற்குள் அலங்கரிக்கப்பட்ட சப்ரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பிரதோஷ விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



## திருப்பூர் நஞ்சப்பா பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

திருப்பூர். பிப்.18-

தமிழ்நாடு அரசு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பள்ளிகளில் மேல்நிலைப் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கிறது. நடப்பு ஆண்டுக்கான இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நஞ்சப்பா நகரவை ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலை யில்லா மிதிவண்டி வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர் கர்ணன் மற்றும் தனியார் பள்ளி. தலைமையாளர் மணிமாறன், மாமன்ற உறுப்பினர் 36 வது வார்டு திவாகர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விலை யில்லா. மிதிவண்டிகளை வழங்கினர்.



■ ஈரோடு காளிங்கராயன் வாய்க்காலில் சுண்ணாம்பு ஓடை அருகில் அமைந்துள்ள 750 வருட பழமையான 16 கண் பாலத்தை இடிக்க தமிழகஅரசின் முயற்சியை தடுக்க கோரி, ஈரோடு மாவட்ட பாசன விவசாயிகள் மற்றும் அஇஅதிமுக சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளரும், மொடக்குறிச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான V P சிவசுப்பிரமணி மனு அளித்தார். கழக நிர்வாகிகள் மற்றும் பாசன விவசாயிகள் உடன் இருந்தனர்.

## 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்: அமைச்சர் பி.மூர்த்தி உறுதி



அலங்காநல்லூர்.
பிப்.18-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டுகடை தனியார் திருமண மண்டபத்தில் திமுக சார்பில் சோழவந்தான் தொகுதி பொது உறுப்பினர்கள் மற்றும் பாக முகவர் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் மூர்த்தி, தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், முன்னிலையிலும் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். இதில் அமைச்சர் மூர்த்தி பேசியது நாடாளுமன்ற தேர்தலில் மகத்தான வெற்றியை பெற்றோம்.

அதேபோல் வரும் சட்டமன்ற தேர்தலிலும் 200 க்கு மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வர் ஆக்குவோம் அரசின் பல்வேறு திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறி வாக்கு கேட்க வேண்டும், மகளிர் உரிமைத் தொகை 5000 வழங்கியது குடும்பத் தலைவிகளிடம் திமுகவுக்கு நல்ல வரவேற்பு உள்ளது .மகளிருக்கு எண்ணற்ற திட்டங்களை இந்த அரசு செய்துள்ளது விவசாயிகளின் உற்ற தோழனாகவும் பாமர மக்களின் அண்ணனாக தம்பியாக விளங்கக்கூடிய நமது முதல்வர் அவர்கள் மக்களுக்காக உழைத்துக் கொண்டு இருக்கிறார் அவர் மட்டும் அல்லாது இளையவர் உதயநிதியும் தொடர்ந்து உழைத்துக் கொண்டு உள்ளார். அதற்கு கிளைச் செயலாளர் பூத் கமிட்டியின் நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும் உழைத்தால் தான் வெற்றி கிடைக்கும் என்று தெரிவித்தார்.

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் புதூர்சேகர், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், தனசேகர், பசும்பொன்மாறன், சிறைச்செல்வம்,

விவசாய அணி இடையப்பட்டி நடராஜன், நகர செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், சத்தியபிரகாஷ், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், சுமதி பாண்டியராஜன், பால்பாண்டி, ஜெயராமன், துணைத் தலைவர்கள் சுவாமிநாதன், வாடிப்பட்டி வக்கீல் கார்த்திக்,முன்னாள் பேரூராட்சி தலைவர் அழகுஉமாபெரியசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சந்தர்ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், பாலமுருகன், ஒன்றிய அணி அமைப்பாளர்கள் சந்தனகருப்பு, யோகேஷ் தவசதீஷ், பாலகிருஷ்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## மங்கலம் ஊராட்சியில் ரூ.பல லட்சம் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள்: எம்.எல்.ஏ எம்.எஸ்.எம். ஆனந்தன்

திருப்பூர், பிப்.18-

திருப்பூர் மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அக்ரஹாரப்புத்தூர் பகுதியில் உயர்மின் கோபுர விளக்கு மற்றும் சின்னப்புத்தூர் பகுதியில் ஒரு உயர்மின் கோபுர விளக்கு என மொத்தம் 2 மின் கோபுர விளக்குகள் திறப்புவிழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் எம். எஸ்.எம். ஆனந்தன் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு திருப்பூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மங்கலம் சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். அ.தி.மு.க. மாநில விவசாய அணி துணை செயலாளரும், பல்லடம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கே.பி.பரமசிவம், சிறுபான்மைபிரிவு மாநில துணைச்செயலாளர் மாவட்ட செயலாளர் சிராஜ்தீன், அஸ்கர் அலி, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைச்செயலாளர் பாலசுப்பிரமணியம், மங்கலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க முன்னாள் துணை த்தலைவர் முத்துக்குமார். மங்கலம் முத்துச்சாமி ஜெயலலிதா பேரவை துணை செயலாளர் ஜெயம் என். மகேந்திரகுமார், திருப்பூர் மேற்கு மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் நந்தகுமார். வேட்டுவபாளையம் கிளை செயலாளர் ஆனந்த், ரபிதீன், நாசர் அலி, பத்மநாபன், சுந்தர மூர்த்தி,அஜீத் கோவிந்தன் ,லாரன்ஸ்,கோவிந்தசாமி, துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் பேரையூர் வட்டத்தில் ரூபாய் 13.71 கோடி மதிப்பீட்டில் 35,212 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரையூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் பார்வையிட்டார்.பேரையூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்ற மண்டபம் 1 – நீதிமன்ற மண்டபம் 2, நீதிபதி அறை, கார் பார்க்கிங், வழக்கறிஞர் காத்திருப்பு அறை, அரசு வழக்கறிஞர் (GP), பொது வழக்கறிஞர் (PP) – உதவி பொது வழக்கறிஞர் (APP) அறை, இலவச சட்ட உதவி மையம்,கணினி இநீதிமன்றம் (E-Court), பாதுகாப்பு அறை (Strong Room), மருந்தகம், கழிப்பறைகள், நீதிமன்ற அலுவலகம், பதிவறை, காவல்துறை காத்திருப்பு அறை, நகலெடுப்பு பிரிவு (Copyist Section), ரிசீவர் நீதிமன்றம், நூலகம், தியான மண்டபம், பொதுமக்கள் காத்திருப்பு அறை, எழுதுபொருள் கடை (Stationery Store) காணொளி காட்சி கூட்ட அரங்கு உள்ளிடவை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.






## நடைபாதை வியாபாரிகளுக்கு நலவாரிய முகாம் நடத்த ஜோசப் தலைமையில் வணிகர் சங்கத்தினர் மனு

ஈரோடு, பிப்.18-

ஈரோடு மாவட்டத்தில் உள்ள நடைபாதை, தள்ளுவண்டி, தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை வியாபாரிகளுக்கு அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடத்த வலியுறுத்தி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. முன்னதாக மாவட்டத் தலைவர் ஜோசப் தலைமையிலான நிர்வாகிகள் தொழிலாளர் உதவி ஆணையரை (சமூக பாதுகாப்புத் திட்டம்) சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கினர்.

அப்போது ஈரோடு மாவட்டத்தில் பேரவையில் பதிவுபெற்ற லட்சக்கணக்கான வியாபாரிகள் உள்ள நிலையில் அவர்கள் நலவாரியத்தில் சேருவதற்கு வெளி இடங்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர். இதற்குப் பதிலளித்த அதிகாரி இக்கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து அவரது வழிகாட்டுதலைப் பெற்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்த தலைவர் ஜோசப் தலைமையிலான குழுவினர் வியாபாரிகள் மற்றும் அவர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் அரசின் சலுகைகளைப் பெறும் வகையில் சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும் என மனு அளித்தனர். இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் ஆயிரக்கணக்கான வணிகக் குடும்பங்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் போது மாவட்டச் செயலாளர் நித்தியகுமார், மாவட்ட தலைமை நிர்வாகச் செயலாளர் சுகன்யா, மாவட்டத் துணைத் தலைவர் பூங்கொடி மணி, நடைபாதை வியாபாரிகள் சங்கப் பொறுப்பாளர் சர்தார் பாய் மற்றும் உறுப்பினர் மும்தாஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.







SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000